ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2398/27 – 2024 අගෝස්තු මස 22 වැනි සිකුරාදා – 2024.08.22
*2398/27 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 22 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

**பதுளை கதிர்காம தேவாலயத்தின் வருடாந்த பெரஹரா ஊர்வலம்**

*362 ஆம் அத்தியாயமான யாத்திரைகள் கட்டளைச்சட்டத்தின்படி வெளியிட்டுள்ள 1948, செத்தெம்பர் 10 ஆந் திகதி 9902 ஆம் இலக்க வர்த்தமானி, 1951, ஓகத்து 17 ஆந் திகதி 10283 ஆம் இலக்க வர்த்தமானி, 1955, மாச்சு 25 ஆந் திகதி 14778 ஆம் இலக்க வர்த்தமானியினூடாகவும், 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க அதிகாரம் வழங்கல் (பிரதேச செயலாளர்களுக்கு) சட்டத்தின் ஊடாக 2009.10.02 ஆந் திகதி 1622 ஆம் இலக்க வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பதுளை கதிர்காம தேவாலய (வருடாந்த பெரஹரா) தொடர்பான சட்டக்கோவையின்படி பதுளை பிரதேச செயலாளர் துஷாரி அனுராதா நாணாயக்கார ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, 2024 பதுளை கதிர்காம தேவாலயத்தின் வருடாந்த பெரஹரா தொடர்பாக பின்வருவனவற்றை ஆணையிடுகின்றேன்.*

*1. செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி “ கப்” நடுகையோடு பதுளை கதிர்காம தேவாலய வருடாந்த பெரஹரா ஆரம்பமாகி, 2024 செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி முதல் செத்தெம்பர் 08 ஆந் திகதி வரை (5 நாட்கள்) உள்ளக பெரஹரா, 2024 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி முதல் செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி வரை (5 நாட்கள்) குபல் பெரஹரா, 2024 செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி முதல் 18 ஆந் திகதி வரை (5 நாட்கள்) ரந்தோலி பெரஹரா, 2024 செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி அதிகாலை நீர் வெட்டும் வைபவம், 2024 செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி மதியம் பெரஹரா தேவாலயத்தினுள் வருகையோடு திருவிழா முடிவடையும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.*

PG6711– 284 (2024/05)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. பெரஹராவின் பயணப் பாதை

2024 செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி பதுளை கதிர்காம தேவாலயத்தில் இருந்து பதுளை லோவர் வீதியினூடாக முதியங்கன விகாரைக்கு வருகை தந்த பின், முதியங்கன விகாரை பெரஹராவுடன் லொன்டன் வீதி, அநகாரிக தர்மபால மாவத்தை, கொக்கோவத்தை வீதி, உதயராஜ மாவத்தை, வெல் போதி சந்தி, ரஜ வீதி, பஸார் வீதி, லோவர் வீதியூடாக மீண்டும் பதுளை கதிர்காம தேவால சிம்மாசனத்தினை வந்தடைதல்.

3. பதுளை கதிர்காம தேவாலயத்தின் காணியினுள் மற்றும் தேவாலயத்திற்குரிய சிம்மாசனம் அமைந்துள்ள காணி ஆகிய இடங்களிலும் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிதேசங்களிலும் உணவு சமைப்பது மற்றும் வியாபாரம் செய்வதைத் தடை செய்கின்றேன்.

4. பெரஹரா நாட்களில் பிரதான வீதிகளில் தனியார் வாகனங்கள் நிறுத்தி வைப்பதைத் தடைசெய்வதுடன், துவிச்சக்கர வண்டி மற்றும் தள்ளுவண்டிகள் உட்பட அனைத்து வாகனங்களும் என்னிடம் அல்லது தேவாலய பொறுப்பாளர் நிலமே அவர்களிடம் அனுமதிப்பத்திரம் பெறாமல் தேவாலய காணியினுள் நுழைவதை தடை செய்கினறேன்.

5. பெரஹரா பயணிக்கும் பாதையில் பதுளை மாநகர சபையின் மூலம் முறையான அனுமதியுடன் அமைக்கப்பட்ட கட்டிடங்கள் மற்றும் தற்போதுள்ள நிலையான கட்டடிடங்கள் சுகாதார திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். காணித்துண்டுகளை வாடகைக்கு எடுக்கும் வியாபாரிகள் தாம் தேவாலய பெரஹராவின் பினார் தமது தற்காலிக கட்டிடங்களை அப்புறப்படுத்தியதன் பின்னர் பெரஹரா பயணிக்கும் பாதை மற்றும் தேவாலய காணியினுள் பொலித்தீன் உட்பட அனைத்து விதமான கழிவுகளையும் ஒன்று சேர்த்து மக்கள் பொது சுகாதார பரிசோதகர்களின் அறிவுறுத்தலின் பிரகாரம் அகற்றுதல் வேண்டும்.

6. என்னிடம் பெற்றுக் கொண்ட அனுமதிப்பத்திரமின்றி புனித பூமியினுள் மற்றும் அதன் பகுதிகளில் தற்காலிகமாகவேனும் கட்டிடம் அமைப்பதைத் தடை செய்கின்றேன்.

7. எவரும் எனது அல்லது பதுளை மாநகர சபையின் மூலம் அனுமதி பெறறுக்கொள்ளாமல் பாதையாகப்பயன்படுத்தப்படும் அல்லது வேறாக்கப்பட்ட அல்லது ஏதாவது நிலம் அல்லது புனித பூமி பிரதேசத்தினுள் ஏதாவது நிலத்தை அடிப்படையாகக் கொண்டு கூடாரம் அல்லது ஏதாவது கட்டிடம் ஒன்றை அமைப்பது அல்லது பெரிதாக்குவது போன்றன செய்தல் கூடாது.

8. பட்டாசு வெடி, பிரதேசத்தினுள் கொளுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.

9. பிரதேச செயலாளரின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் அனுமதியின்றி எந்த ஒரு நபரும் இலக்கம் 3 இல் குறிப்பிட்டுள்ள பாசறைப் பிரதேசத்தில் டிக்கட்டுள், கொடி போன்றவை விற்றல் அல்லது வேறு விதமான முறையில் எந்த ஒரு நிதி அறவிடலும் செய்யக்கூடாது.

துஷாரி அனுராதா நாணாயக்கார,
பிரதேச செயலாளர்,
பதுளை.

பதுளை பிரதேச செயலகத்தில்,
2024, ஓகத்து 09.

EOG 08 - 0264

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.